1971 அக்டோபர் 21] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

As the hon. Member has used the expression '(R)', the House would be interested to know to which party he is referring to. What exactly is the expansion of the letter 'R' and we do not know it. There may be 'R' in Delhi but so far as Tamil Nadu is concerned, there is no 'R' as the D.M.K. is the ruling party. I would like to know whether it would be possible to elicit further information from the hon. Member, Thiru Kasiraman.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் இங்கு ரூலிங் கட்சியாக இல்லாவிட்டாலும் ரூலிங் கட்சியின் பக்கம் இருப்பவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரில் எதுவும் இல்லை. ரோஜா என்பதற்கு வேறு என்ன பெயர் வைத்தாலும் ரோஜா ரோஜா தான் என்று சொல்வதுபோல் பெயரைப் பற்றி நாம் ரொம்ப நேரம் அலட்டிக் கொள்ளக்கூடாது. பெயர் என்பது ஒரு அடையாளம்தான். அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி பெயர் அமையலாம்.

5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 6(1) விதியின்கீழ் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நான் நியமித்திருக்கிறேன் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(1) திரு. மா. வெ. கரிவேங்கடம்.

(2) திருமதி ஜோதி வெங்கடாசலம்.

(3) திரு. நா. வீராசாமி.

(4) திரு. நீ. அன்புச்செழியன்.

(5) திரு. என். கே. பழனிசாமி.

(6) திரு. எம். ஏ. லத்தீப்.

6 அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23 (1)-ஐத் தள்ளிவைத்து அரசினர் அலுவலை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 23 (1)-வது விதியைத் தள்ளி வைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே தங்கமணி : தலைவர் அவர்களே, இடைத் தேர்தலுக்குப் பிறகு நம் சட்டமன்றம் கூடுவது இது மூன்றாவது தடவையாகும். முதல் தொடரில் நமக்கு நான்-அஃபிஷியல் டே என்பது இல்லாமல் போய்விட்டது. காரணம் அப்பொழுது

ஆளுநர் அவர்களின் உரை இருந்த காரணத்தினால். அடுத்த தொடரில் பட்ஜட் விவாதம் இருந்த காரணத்தினால் அப்போதும் நான்-அஃபிஷியல் டே இல்லாமல் போய்விட்டது. இப்போது மூன்றாவது தடவையாக நமது கூட்டத்தொடர் கூடுகிறபோது, வியாழக் கிழமை, வியாழக் கிழமை நான்-அஃபிஷியல் டே என்று விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அநேகமாக ஒவ்வொரு தொடரிலும் ஒரு ப்ரைவேட் மெம்பர் டே இருக்கவேண்டுமென்ற அளவிற்கு பல விஷயங்கள் எல்லாம் கூறி வரப்படுகிறது. இந்த நிலையில் இந்தத் தொடர் கூடுகிறபோது ப்ரைவேட் மெம்பர் டே இல்லாத அளவிற்கு ஒரு நிலையை ஏற்படுத்துவது என்பது சரி அல்ல என்று என் கருத்தை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் உங்களுக்கும் தெரியும், பல ப்ரைவேட் மெம்பர்கள் தீர்மானங்கள், மசோதாக்கள் எல்லாம் வந்திருக்கின்றன என்பது. உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது அம்மாதிரியாக அரசின் சார்பில் அந்த டே-யை மாற்றிவேண்டுமென்றால் இன்னொரு தினத்தை நான்-அஃபிஷியல் டே ஆக நிர்ணயிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அம்மாதிரியாக ஒரு நாள் இருக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I would like to submit a few remarks regarding the motion that is before the House. Rule 23 of our Assembly Rules reads as follows :—

'On all Thursdays on which the Assembly is sitting, except—

(i) Thursdays allotted for the discussion of financial matters under Articles 202 to 206 of the Constitution, and

(ii) Thursdays allotted for the discussion of any motion on the Governor's Address the business of non-official members shall have precedence :

Provided that, on a motion made by a Minister for the suspension of this rule, the Assembly may resolve to give precedence to Government business even on those Thursdays on which the business of non-official members has precedence under this rule : . . . '

Sir, under this rule, the ruling party has got the prerogative to see that a Non-official Day is taken away and another day is allotted for discussion of the non-official business. As has been pointed out by the hon. Member, Thiru K. T. K. Thangamani, usually there is corrosion of the rights of the non-official business which is pending in this House. So far as non-official business is concerned, there is little regard for it. I am sorry to say that non-official day should not be taken away for governmental business. Of course, an important resolution is coming up for discussion before this House. That does not mean that the rights of the House should be whittled down: the rights conferred under the rule are very valuable. So, I would oppose the motion which is before the House on the ground that another day should be

1971 அக்டோபர் 21] [Thiru R. Ponnappa Nadar]

allotted and that should be announced here and now so that we can have some time to discuss non-official matters which are pending before this House. With these observations, I would once again entreat the Hon. Speaker to give a ruling to the effect that another day should be specifically earmarked during this session itself for the consideration of non-official matters.

Dr. H. V. HANDE : Sir, this problem has been engaging the attention of even the Business Advisory Committee. In the last meeting of the Business Advisory Committee also most of the members tried to persuade the Government or the Ministers concerned to see that at least in every session we have one non-official day. Even during the Budget session it was pointed out by several Members that two non-official days should be allotted even during the Budget session and the Members belonging to the Treasury Benches stated that that would be difficult to accept. In view of the fact that several Members have felt that their rights are affected and in view of the fact that to-day itself which is a non-official day is proposed to be taken away, I strongly oppose this motion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான்-அஃபிஷியல் டே என்பதற்கு ஒரு நாள் ஒதுக்கவேண்டும் என்கிற கருத்துக்கு நான் மாறுபட்ட கருத்து எதையும் இங்கு சொல்ல விரும்பவில்லை. ஆனால் இன்றைக்கு ஒரு வரலாற்றுப் புகழ் மிகுந்த ஒரு முக்கியமான தீர்மானத்தை இந்த அவையில் விவாதிக்க இருக்கிறோம். இந்த நிலையில் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி நம்முடைய மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல் இதை எதிர்க்கிறேன் என்று கூறுவது ஒரு முக்கியமான திருத்தம் வருகிற நேரத்தில் அதற்குக் குந்தகம் விளைவிப்பது போன்றதொரு சூழ்நிலையை இந்தத் திருத்தங்களை விரும்பாதவர்கள் பிரசாரம் செய்யக்கூடும். அதையும் மனதில் எண்ணிப் பார்த்து நான் சொல்வதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று காலையிலே கூட திரு. தங்கமணி அவர்கள் என்னிடத்தி லேயும், மாண்புமிகு அவைமுன்னவரிடத்திலும் இது பற்றி விவாதித்து இருக்கிறார்கள். இதற்கு என்று ஒரு தனி நாள் ஒதுக்குவது பற்றிக் கேட்டார்கள். தங்களுடைய அறையிலே கூட இருக்கும் பிசினெஸ் அட்வைசரி கமிட்டியில் இதுபற்றி யோசித்து முடிவு எடுக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்ப இன்றைய அலுவல் நேரம் முடிந்ததும் தலைவர் அவர்களுடைய அறையிலே கூட இருக்கும் பிசினெஸ் அட்வைசரி கமிட்டியில் ' நான்-அஃபிஷியல் டே ' என்று ஒரு நாள் வியாழக்கிழமையாவது அல்லது வேறு ஒரு நாளாவது ஒதுக்குவது பற்றி முடிவு செய்யலாம் என்று நான் எடுத்துக் கூறி, இப்போது அவைமுன்னவரால் இங்கே கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தலைவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் சொல்லியதை ஒட்டி இந்தப் பிரச்னை பற்றி நான் இந்த நேரத்தில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு திரு. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அதிகாரபூர்வமற்ற நாளை அரசாங்கம் ஏதோ பறித்துக்கொண்டு விட்ட மாதிரியான நிலைமையில் சொன்னார்கள். அதற்காக சமாதானம் சொல்ல வேண்டிய பொறுப்பு ஆளும் கட்சிக்காரர்களுக்கு இருக்கிறது. பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கமணி அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் நான்-அபிஷியல் பிசினஸ் பற்றிச் சொன்னார்கள். நான் இந்தப் பேரவைத் தலைவன் என்ற முறையில் எல்லாத் தரப்புக் கட்சிக்காரர்களின் உரிமைகளையும் கட்டிக் காக்கும் கடமையில், இந்தப் பிரச்சினை குறித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திரு. தங்கமணி அவர்கள் என்னுடைய கருத்தைத் தெளிவாக அறிவார்கள்.

இன்று இருக்கும் நம்முடைய சட்டசபையின் விதிகளின்படி இரண்டு மூன்று நேர்வுகளில் நான்-அபிஷியல் பிசினஸ் வருவதில்லை. ஒன்று, நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது வருவதில்லை. இரண்டு, ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது வருவதில்லை. ஏறக்குறைய இந்த சட்டசபை கூடிய ஏழெட்டு மாதங்களில் ஆளுநர் உரை மீதும், இரண்டு நிதிநிலை அறிக்கைகளின் மீதும் விவாதம் நடைபெற்ற காரணத்தால் நான்-அபிஷியல் டே-வுக்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆனால் இது ஏதோ ஆளுங்கட்சிக்காரர்கள் உறுப்பினர்களுடைய உரிமையை குறுக்கி விட்டார்கள், பறித்து விட்டார்கள் என்ற வாதம் சரியானதல்ல. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல் ஒரு அரசியல் சட்டத்திருத்த மசோதா இங்கே வருகிற காரணத்தால்தான் இங்கே 23-வது விதியின்கீழ் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை இந்த மன்றம் அனுமதிக்கிறதே தவிர சபாநாயகர் அனுமதிப்பதில்லை. மாண்புமிகு அவைமுன்னவர் கொண்டு வந்த தீர்மானத்தை இந்த மன்றம் ஏற்றுக்கொண்டால்தான் வேறு மாதிரியான நிகழ்ச்சி நிரலை எடுத்துக்கொள்ளலாம் என்று நமது சட்டசபை விதிகளில் இருக்கிறது. சபாநாயகருக்கு இருக்கும் உரிமை எல்லாம், தாட்சண்யத்திற்கு என்று வேண்டுமானால் இவர்கள் இப்படி எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்பதற்காக, இன்னொரு நாளை அதற்காக ஒதுக்கலாம். நாம் இந்தச் சட்டசபைத் தொடர் அலுவல் குறித்து பேசவிருக்கிறோம். இந்தச் சட்டசபைத் தொடரிலேகூட இன்றைக்கு வந்திருக்கும் நிலைமையைப் பொறுத்து இந்தச் சட்டமன்ற விதிகளை அவர்கள் மாற்றலாம். அதற்கு ஆளுங்கட்சிக்காரர்கள் உதவி செய்யலாம். பட்ஜெட் விவாதத்தின்போதும், கவர்னர் உரையின் மீதான விவாதத்தின் போதும்கூட இந்த நான்-அபிஷியல் டே அதிகாரபூர்வமற்ற நாள் வைத்துக்கொள்வதற்கான தீர்மானம் கொண்டு வரலாம். அதற்கு

1971 அக்டோபர் 21] [பேரவைத் தலைவர்]

வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமையில் என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொண்டு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

'தமிழ்நாடு சட்டப்பேரவையின் 23 (1)-வது விதியைத் தள்ளி வைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் இன்னொரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப்பேரவை விதிகள் 23 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள இனம் **'5. சட்டமுன்வடிவு'** என்பதை இனம் '4. அரசினர் தீர்மானம்' என்பதற்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1971.)

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

"That leave be granted for the withdrawal of the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill, 1971 (L.A. Bill No. 33 of 1971) introduced in the last session of the Assembly."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I withdraw the Bill.

MR. SPEAKER : The Bill is withdrawn.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும்,